## திரட்சியும் எழுச்சியும் நிறைந்த இளைஞர் மாநாடு

காரைக்குடி தோழர்களின் மிகச் சிறந்த ஏற்பாட்டில் வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த நிகழ்வாக தமிழக இளைஞர் மாநாடு நடந்தேறியுள்ளது. அவை நிறைந்து 600 தோழர்கள் மாநாட்டில் பங்கேற்றனர். மாநாட்டு நிகழ்வுகளை மிகுந்த விழிப்புடன் தோழர்கள் கவனித்தது பாராட்டிற்குரியது.

முதன் முதலாக மாபெரும் மாநாடு ஒன்றிற்கு- தங்களது சொந்த மாநாட்டிற்கு – இளைஞர் குழாம் தலைமையேற்றது. தோழர்கள் ரமேஷ், சுபேதார் அலிகான், ஜேம்ஸ் ஆகிய தோழர்கள் தலைமைக் குழுவாக ஒருங்கிணைந்து செயல்பட்டனர். அவர்தம் பெயர்களின் அடையாளமே இந்திய சமுக ஒற்றுமை குறித்த நமது விழைவை வெளிப்படுத்தியது. ஆனந்தன், துரை, அமலநாதன் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக நடந்த கொடியேற்று விழாவில் நெகிழ்வையும் நெஞ்சுரத்தையும் கூட்டும் முழக்கங்களை நாகேஸ்வரன் எழுப்பினார். இளந்தோழியர் ரம்யாதேவி தேசியக்கொடியையும், கார்த்திகா சம்மேளனக் கொடியையும் உயர்த்தினர்

வந்திருந்த நூற்றுக்கணக்கான தோழர்களை TMTCLU மாவட்ட செயலர் லால்பகதூரும், NFTE மாவட்ட செயலர் மாரியும் வரவேற்று உரை நிகழ்த்தினர். காரைக்குடியின் மாண்பு, NFTEன் உயர் பாரம்பரியம், மதசார்பின்மையின் அவசியம், தாங்கள் பொறுப்பெடுத்து நடத்தும் இளைஞர் மாநாட்டின் பெருமிதம் குறித்த செய்தி அவர்களது வரவேற்புரையில் இருந்தது. இந்திய சமூகம், NFTE தலைவர்களின் உயர் நெறிகள், இளைஞர்களின் எதிர்காலம் ஆகியனவற்றை

பாடுபொருளாக்கி தனது கவிதை படைப்பை அரங்கில் வைத்தார் நாகேஷ். பாரதியின் பாடல்களை இசைகுழுவினர் தந்தனர்.

மாநாட்டின் நோக்கம் குறித்து மாநிலச் செயலர் பட்டாபி துவக்கவுரையாற்றினார். இந்திய விடுதலையின் மரபு, NFTE தலைவர்களின் பேராற்றல், சிறப்புகள், நியாயம் கேட்கும் ஆவேசம், போர்க்குணம், அரசியல் உணர்வு, தமிழ்நேயம், மனிதம் போற்றல் ஆகியன குறித்து உரையாற்றினார். BSNLல் என்னதான் நடக்கிறது, நட்டத்திற்கான காரணங்கள், போட்டி கம்பனிகளின் யோக்கியதை, தொலைத்தொடர்பில் முதலாளித்துவ சுரண்டல், வேலைவாய்ப்புகளை பெருக்காத அசுர வளர்ச்சி ஆகியன குறித்து அவரது உரை பளிச்சிட்டது. இயக்கத்தில் இளைஞர்களின் ஆக்கபூர்வ செயல்பாட்டின் அவசியம் குறித்து அவர் சுட்டிக் காட்டினார்.

பேராசிரியர் ராகுலதாசன் தனது உரையில் இலக்கிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். பாரதியின் அக்கினி குஞ்சொன்று கண்டேன் குறித்து விதந்து பேசினார். குன்றக்குடி மடத்தின் மனிதாபிமான போராட்டங்களை அவர் வரிசைப் படுத்தினார். இளஞர் மாநாடு நடத்தும் காரைக்குடி தோழர்களை பாராட்டினார்.

மாநாட்டில் குன்றக்குடி அடிகளாரின் பங்கேற்பும் அவரது உரையும் உற்சாகத்தை- உத்வேகத்தை அதிகப்படுத்தியது. அடிகளார் தனது உரையால் அனவரையும் வசீகரித்தார் என்றால் மிகையாகாது. வ உ சியின் சகோதரர் பைத்தியமாகி தெருவில் உணவிற்கு நின்ற காட்சியை அவையோர் முன் கொணர்ந்தார். சுப்பிரமண்ய சிவாவின் கம்பீரம், மகாத்மாவின் த்லைமை, நேருவின் மேதாவிலாசம், உலக அரங்கில் மார்க்ஸ், லெனினின் மேதமை, உலகை மாற்றிய மூலதனம், பகுத்தறிவு போன்ற புத்தகங்களின் பேராற்றல் ஆகியவற்றை அவர் பெருமிதம் பொங்க எடுத்துரைத்தார். இளமை என்பது வயது சார்ந்த ஒன்றல்ல- செயல்

சார்ந்தது என்றார். எல்லை ஆக்கிரமிப்பை மட்டுமல்ல, கொல்லைப்புற பொருளாதார ஆக்கிரமிப்பை எதிர்த்தும் போராடுக என்றார். பொதுத்துறை காக்கும் போரின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்..

சட்டமன்ற உறுப்பினர் தோழர் குணசேகரன் பங்கேற்று எழுச்சியுரை நல்கினார். செயல் அதுவே ஆகச் சிறந்தது-எழுச்சி என்பது செயல்தான் என்றார்.அன்னாஹசாரேவின் போராட்டத்தை அவர் சுட்டிக் காட்டினார். சமச்சீர் கல்வியின் அவசியம் பற்றியும் சட்டமன்றத்தில் தனது அனுபவங்கங்களையும் விளக்கினார். இளைஞர்கள் திரண்டால் புதிய யுகத்தைப் படைக்கமுடியும் என்று மாநாட்டை வாழ்த்தினார்.

BSNLல் உள்ள இரு இளம் மாநில சங்கங்களை அழைத்திருந்தோம். SNATTA சார்பில் அதன் மாநிலச் செயலர் கலியபெருமாளும், AIGETOAவின் மாநிலத் தலைவர் விஜய்பாபுவும் BSNL சூழல், தாங்கள் ஓய்வு பெறும் வரை கண்டிப்பாக BSNL தழைக்கும் என்ற நம்பிக்கையை அவர்கள் வெளிப்படுத்தினர். SNATTA கலியபெருமாள் NFTE உடன் சேர்ந்து பணியாற்றுவதில் உள்ள பெருமிதத்தை தனது உரையில் வெளிப்படுத்தினார்.

மதிய உணவிற்குப் பின்னர் விவாத அரங்கம் துவங்கியது. 20 இளந்தோழர்கள் தங்களது உரை வீச்சால் அரங்கத்தை அதிர வைத்தனர். அரங்கம் ஆர்ப்பரித்து அவர்களது உரையை கேட்டது. NFTEன் புதிய மரபு துவங்கிவிட்டது என்பதற்கு சாட்சியமாக அமைந்தது அவரகளது உரைகள்.

வாழ்த்துரை நிகழ்வில் தோழர்கள் ஜெய்பால், சேது, பரிமளம், சென்னகேசவன், நடராஜன், முரளீதரன் பங்கேற்று செழுமையான கருத்துக்களை தந்தனர். தோழியர் பரிமளம் மகளிர் மைய செயல்பாடு, அரேபிய எழுச்சியில் இளஞர் பங்கு குறித்து பேசினார். தோழர் முரளி தனது 22வது

வயதில் கிளைச்செயலர் பொறுப்பேற்ற அனுபவத்தையும், மாநாட்டில் இளைஞர்கள் ஆற்றிய தரமான உரைகளுக்கு பாராட்டையையும் தந்தார். தோழர் சென்னகேசவன் வந்து கொண்டிருக்கும் புதிய தொழில்நுட்ப மாற்றங்களை விவரித்தார். தோழர் நடராஜன் இளைஞர் மாநாடு உருவாக்கத்திற்கு உரிய பின்னணியை விளக்கினார். தோழர் சேது மாநாடு உருவானவிதம், இளைஞர்களிடம் NFTE எதிர்பார்ப்பது என்ன என்ற வினா எழுப்பி விளக்கினார். தோழர் ஜெயபால் இளந்தலைமுறை ஒன்றை அடையாளம் காணவும் , அவர்களை இயக்க பொறுப்புகளில் தோள் கொடுக்க பழக்கவும், மூத்த தோழர்களுடன் ஒத்திசைவுடன் செயல்பட வைத்திடவும் இளஞர் மாநாடு வழி வகுத்துள்ளது என்ற செய்தியை உரத்த சிந்தனையுடன் வெளிப்படுத்தினார். தோழர் ராபர்ட் கோவையில் மத்திய செயற்குழு தொடர்பான வேலைகளை விளக்கினார். நிதி உதவியை உடனே செய்து தருமாறு வேண்டுகோள் விடுத்தார். தோழர்கள் பழனியப்பனும் அன்பழகனும் தீர்மானங்களை முன் வைத்தனர்.

விவாதங்களை முடித்து வைத்து மாநில செயலர் சுருக்கமான விளக்க உரை நல்கினார். தொழில்நுட்ப பகுதியில் வாழ்ந்துவரும் நாம் நமது தலைவர்களின் உரைகளை பதிவு(ஒலி-ஒளி) செய்ய தவறிவிட்டோம். அடிகளாரிடம் கூட தங்களது உரை கூட இணய தளம் மூலம்  சமுக விழிப்புணர்விற்காக வெளியாக வேண்டும் என்றோம். BSNL Products யை இளைய சமுகத்திடம் கொண்டுபோக கல்லூரி உயர்நிலை பள்ளிகளில் BSNL குறித்த Quiz programme நடத்தப்படவேண்டும். தெருமுனைக் கூட்ட வடிவில் BSNL Productsயை மக்களிடம் கொண்டு செல்லவேண்டும். பொது இயக்கங்களில்- குருதிக் கொடையில் நமது இளைஞர்கள் முன் நிற்க வேண்டும் என்றார் மாநிலச் செயலர்.

மாநாட்டின் நிறைவுரையை சம்மேளன செயலர் தோழர் ஜெயராமன் நல்கினார். உலகின் மாற்றங்களை நடத்தி காட்டியவர்கள் இளைஞர்கள். சாக்ரடிஸ் வயதானவன் ஆனால் அவனது உரை இன்றும் சிக்கென இளைஞனைப் பற்றுகிறது. சிந்தாதரிபேட்டை சிந்தனையின் மையம். திரு வி க வாரியார் போன்றவர்கள் பல உரைகளை தந்த பகுதி. சேலம் குடந்தை தோழர்கள் அருமையாக பேசினார்கள். பல தோழர்களின் உரையில் எனக்கு நிறைவு ஏற்பட்டுள்ளது. இயக்க வியூகங்களை கம்பராமயணத்திலும் கற்க முடியும். இயக்கம்- கட்டமைப்பு-ஜனநாயகம்-கட்டுப்பாடு என பல அம்சங்களை கம்பர் கவித்துவமாக முன் வைக்கிறார். வேலைப்பகிர்வு என்பது கூட அங்கு வற்புறுத்தப்படுகிறது. மாநில சங்கம் அதை செய்கிறது. அமையப் போகும் தமிழ் மாநில இளைஞர் மைய செயல்பாடு சிறக்க வாழ்த்துகிறேன். NFTE மற்றும் BSNL வளர்ச்சியுடன் நீங்களும் நிறை வளர்ச்சி அடையுங்கள் என்றார் சம்மேளன செயலர்.

மாநாட்டின் இறுதி நிகழ்வாக அமைந்த நன்றி நவிலல் கடமையை இளம் மாவட்ட செயலர் மதுரை முருகேசன் சிறப்புற செய்தார். காரைக்குடி தோழர்களின் அற்புத பணிக்கும் உரையாற்றிய அனைவருக்கும் உவகையுடன் நன்றி தெரிவித்தார். திரளாக பங்கேற்று புதிய வரலாறு படைத்த அனைவருக்கும் முருகேசன் மாநில சங்கம் சார்பில் நன்றி தெரிவித்தார். நினைவில் நிற்கும் மாநாடாக காரைக்குடியை மாற்றிய அனவருக்கும் நமது பாராட்டுதல்.